**சார்பு நீதிமன்றம், சீர்காழி.**

**OS.408/2023**

பெயர் : பாலசுப்பிரமணியன் (PW1) (Cross)

த/க/பெ. :

தேதி :09.07.2025

சாட்சி நீதிமன்றம் ஆஜராகி சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டார்.

**1வது பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை**

நான் அடமானம் வைத்ததற்கு பிரதிவாதி மாற்றி எழுதி பதிவு செய்து கொண்டதால் இந்த வழக்கை போட்டுள்ளேன். வழக்கு சொத்து வள்ளுவக்குடி கிராமத்தில் உள்ளது. 2 அயிட்ட சொத்திற்கு வழக்கு போட்டுள்ளேன். முதல் அயிட்ட சொத்து என் பெயரில் கிரயம் பெற்றுள்ளது என்றால் சரிதான். 2 வது அயிட்டம் என் மனைவி 2 ம் வாதி பெயரில் உள்ளது. 2016 ல் கரண்ட் ஷாக் அடித்தது. தேதி மாதம் நினைவில்லை. கரண்ட் ஷாக் அடித்தற்கு வழக்கு எதுவும் பதிவு செய்யவில்லை. கரண்ட் ஷாக் அடித்த போது சிதம்பரம் அரசு மருத்துவமனையில் சிகிச்சை எடுத்துக் கொண்டேன். சிகிச்சைக்கான ஆவணங்களை வழக்கில் தாக்கல் செய்யவில்லை. எனக்கு மின்சாரம் தாக்கி விபத்து ஏற்படவில்லை என்றாலும் அவ்வாறு ஏற்பட்டிருந்தால் வழக்கு பதிவு செய்யப்பட்ருக்கும் என்றாலும் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. நானும் என் மனைவியும் முதல் பிரதிவாதிக்கு தாவா சொத்தை பதிவு அலுவலகத்தில் கிரயம் எழுதி கொடுத்தோம் என்றால் அப்போது நான் நினைவின்றி இருந்தேன். 2 ம் வாதிக்கு தெரியாது. நானும் என் மனைவியும் கிரயம் கொடுத்துவிட்டு அடமானம் வைத்துவிட்ட கிரயம் கொடுத்ததாக வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. பதிவு அலுவலத்தில் என்னை விசாரணை செய்தார்கள் என்றால் அப்போது எனக்கு நிதானம் இல்லை. என் மனைவி நல்ல நிலையில் தான் இருந்தார். கிரயம் செய்து கொடுத்த தேதியில் என் அசல் கிரய ஆவணதையும் பிரதிவாதியிடம் கொடுத்துவிட்டேன் என்றால் அசல் ஆவணத்தை வாங்கி கொண்டார்கள். என் அசல் ஆவணம் கேட்டு அறிவிப்பு எதுவும் கொடுக்கவில்லை. அது தொடர்பாக காவல் துறையில் புகார் கொடுத்துள்ளேன். அந்த விபரங்கள் குறித்த ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை. உண்மையாக மோசடியாக ஆவணம் எற்பட்டிருந்தால் அதற்கு உரிய நடடிக்கை எடுத்திருப்பேன் என்றாலும் நல்ல நிலையில் எழுதி கொடுத்தால் நடிக்கை எடுக்கவில்லை என்றால் சரியல்ல. முதல் பிரதிவாதி

மோசடியாக கிரயம் பெற்ற விபரம் 2022 தான் தெரியும். அது வரை சுய நினைவின்றி இருந்தேன். தாவா சொத்தில் மின் மோட்டார் உள்ளது என்றால் சரிதான். மின் மோட்டர் அதனையும் அவர்கள் பெயர் மாற்றம் செய்து கொண்டார்கள் என்றால் என் கையெழுத்து இன்றி செய்து கொண்டார்கள். மின் மோட்டாரையும் சேர்த்து விற்பனை செய்துள்ளாதால் தான் பெயர் மாற்றம் செய்து கொண்டார்கள் என்றால் அந்த விபரம் தெரியாது. 2021 ஆண்டு சொத்தை கொடுக்குமாறு கேட்டேன். 2021ல் விஏஓ சர்டிபிகேட் வாங்கும் போது தான் அந்த விபரம் தெரிந்தது. உண்மையிலேயே சொத்த விற்பணைசெய்து விட்டு தற்போது அதிக விலை விற்கும் நோக்கில் வழக்கு போட்டுள்ளேன் என்றால் சரியல்ல. மோசடியாக கிரயம் என்று வழக்கிறகு முன்பு அறிவிப்பு எதுவும் கொடுக்கவில்லை. எந்த தேதியில் சொத்தை விற்க முறச்சித்தார்கள் என்றால் முதல் பிரதிவாதி அவ்வாறு முயற்சிக்கவில்லை. தாவா சொத்திற்கான கிரய தொகையை முழுதும் பெற்றுக் கொண்டு தற்போதுகிரயம் செல்லாதுஎன்று வழக்கு போட்டுள்ளேன் என்றால் சரியல்ல. 2 லட்சம் பணம் கொடுத்த விபரம் தெரியுமா என்றால் கொஞ்சல் ஞாபகம்உள்ளது. எல்லா விபரமும் தெரியும் என்றாலும் சுயநினைவின்றி படுத்த படுக்கையாக இருந்ததாக வழக்கிற்காக சொல்கிறேன் என்றால் சரியல்ல. முதல் பிரதிவாதி சட்டபடியான உரிமையாளர் என்பதால் அவரிடம்இருந்து வசம் கேட்டக இயலாது என்றால் சரியல்ல. தாவா சொத்து பொறுத்து முதல் பிரதிவாதி உரிமையாளர் என்பதால் அவருக்கு எதிராக விளம்புகை கேட்க இயலாது என்றால் சரியல்ல. 2 லட்சம் பணம் போதாது அதிக பணம் வேண்டும் என்பதால் வழக்கு போட்டுள்ளேன் என்றால் சரியல்ல. எனக்கு பணம் வேண்டாம் நிலம்வேண்டும். அன்றைய தேதியில் அது தான் கிரய மதிப்பு என்றால் சரியல்ல. சொத்தை சட்டபடி பதிவு செய்து கொடுத்துவிட்டு ஆவணம் செல்லாது என்று பரிகாரம் கேட்க இயலாது என்றால் சரியல்ல. சொத்தை பொறுத்து எனக்கு உரிமை இல்லாததால் உரிமை இல்லாத நபர் எந்த பரிகாரமும் கேட்க இயலாது என்றால் சரியல்ல. வா.சா.ஆ. 2 ஆவணத்தில் நான் உடல்நலம் இலலாமல் படுத்த படுக்கையாக இருந்தது குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ. 2 ன் படி எந்த பரிகாரமும் கிடைக்கக்கூடியது அல்ல என்றால் சரியல்ல. வா.சா.ஆ. 1 தான் நானும் என் மனைவியும் முதல் பிரதிவாதிக்கு எழுதிக் கொடுத்தகிரயஆவணம் என்றால் சரிதான். நானும் என் மனைவியும் அதில் கையெத்து போட்டு கொடுத்துள்ளோம் என்றால் அது பற்றி தெரியவில்லை. தொகையை பெற்றுக் கொண்டு கிரயம் கொடுத்துவிட்டு

தற்போது செல்லாது என்று வழக்கு போட்டுள்ளேன் என்றால் சரியல்ல. வழக்கு தள்ளுபடி செய்யக்கூடியளது என்றால் தள்ளுபடி செய்தால் மேல் முறையிடு செய்வோம். 2017 ல் கிரயம் கொடுத்துவிட்டு 2023 ல் வழக்கு போட்டுள்ளதால் வழக்கு காலாவாதியால் பாதிக்க்கபட்டுள்ளது என்றால் சரியல்ல. தாவா சொத்து முதல் பிரதிவாதி உரிமையார் என்பதால் அவருக்கு எதிராக விற்க கூடாது என்று நிரந்தர உறுத்துக்கட்டளை கேட்ககூாது என்றால் சரியல்ல.

**2, 3 வது பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

தாவா சொத்தை பொறுத்து பதிவு விதிகளுக்கு உட்பட்டு பதிவு செய்ததை தடுக்க இயலாது என்றால் சரியல்ல. 2, 3 பிரதிவாதிகளுக்கு சட்ட முன் அறிவிப்பு கொடுக்கபட்வில்லை என்றால் சரிதான். 2, 3 பிரதிவாதிகளுக்கு எதிராக எவ்வித பரிகாரமும் கேட்கபடவில்லை என்பதால் அவர்களுக்குஎதிராக வழக்கு தள்ளுபடி செய்யக்கூடியது என்றால் சரியல்ல.